DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Spl Sessions Case No. 38-2021**

**Deposition of Witness for Prosecution : P.W. 24**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்ரியா | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 21.01.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் வெளிப்பாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.09.2021ந் தேதி வேதாரணயம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது வேதாரண்யம் காவல் நிலைய சிறப்பு உதவி அய்வாளர் பழனிவேல் என்பவர் வேதாரண்யம் காவல் நிலைய குற்ற எண் 561/2021 சட்டப்பிரிவு 294(b), 324, 506(ii) IPC படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது மேல் விசாரணைக்கு வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தமிழ்மணி, சங்கர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரிசைகள் 2. பின்னர் சாட்சிகள் பாலகிருஷ்ணன், சித்தரவேல், சிங்காரு, சகாயம், நெல்சன் சாமுவேல், ராமன், டேவிட் சகாயராஜ், மரியசெல்வம், தமிழ்மணி, சங்கர் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட மனோகரனை

எதிரிகள் திரவம், தமிழ்செல்வம் ஆகியோர் அவரது சாதி பெயரை சொல்லி திட்டி கொலை செய்யும் நோக்கத்தில் அவரை அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். வழக்கை சட்டப்பிரிவை 294(b), 324, 506(ii) IPC லிருந்து 294(b), 324, 506(ii) IPC & 307 IPC, 3(2)(v) (Poa)SC/ST Act 2015 படி சட்டப்பிரிவு மாற்றம் செய்தேன். மேலும் என்னிடம் காட்டப்படும் சட்டப்பிரிவு மாற்றம் அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டது. அது **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல் விசாரணைக்கு வழக்கை கோப்பை வேதாணர்யம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் அ.சா.ஆ.10 09.09.2021 அன்று தான் நீதிமன்றத்திற்கு கிடைக்கபெற்றது என்றால் சரிதான். சட்டப்பிரிவு மாற்றம் அறிக்கை நான் சொன்ன நேரத்தில் தயார் செய்யவில்லை என்றும் அதனால் தான் அது 09.09.2021 அன்று நீதிமன்றத்திற்கு தான் வந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. பாலகிருஷ்ணன், சித்திரவேல், சிங்காரவேல், சகாயம், நெல்சன், சிங்காரு, நெல்சன் சாமுவேல், ராமன், டேவிட் சகாயராஜ், மரியசெல்வம், தமிழ்மணி, சங்கர் அனைத்து வாக்குமூலங்களும் நீதிமன்றத்திற்கு 09.09.2021 அன்று தான் கிடைக்கபெற்றுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த ஆவணங்கள் எதுவும் நீங்கள் சொன்ன 06.09.2021 அன்று தயார் செய்தவை அல்ல என்றும் பின்னிட்டு 09.09.2021 அன்று தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய தனிப்பட்ட லேப்டாப்பில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் பிரிண்டரையும் கையிலேயே எடுத்து சென்றேன். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நியைத்திலேயே தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி எண்ணற்ற வீடுகள் உள்ளன இது மூன்று தெருக்கள் சந்திக்கின்ற மூக்கூட்டு ஆகும். சம்பவ இடத்தில் உள்ள வீடுகள் மற்றும் கடைகளில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் இல்லை. நான் பாலகிருஷ்ணனை விசாரித்தவுடனே இது பட்டியலின SC/ST கீழான குற்றம் என்று

தெரிந்து கொண்டேன். சட்டத்திற்கு மீறி நான் பாலகிருஷ்ணன் தவிர மற்ற சாட்சிகளை விசாரித்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய புலன் விசாரணை படி அ.சா.1 பாலகிருஷ்ணன் சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சி அல்ல. அதேபோல் மரியசெல்வம், ரமணி, தமிழ்மணி, மாசிலாமணி, இளையராஜா, சிங்காரவேல், சிங்காரம், சகாயம், நெல்சன் ஆகியோரும் சம்பவத்தின் கண்ணுற்ற நபர்கள் அல்ல என்றால் சித்தரவேல், சிங்காரு, சகாயம், நெல்சன் சாமுவேல் ஆகியோர் கண்ணுற்ற நபர்களாக காண்பித்துள்ளேன். மற்ற நபர்கள் சம்பவத்தை கேள்விபட்டவர்கள். AR copy ல் குறிப்பாக எந்த இடத்தில் மனோகர் தாக்கப்பட்டார் என்ற விபரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த ஆயுதத்தால் தாக்கப்பட்டார் என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேட்டில் மனோகர் மது அருந்தியிருந்ததாகவும், சுயநினைவின்றி இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். விபத்து பதிவேட்டில் மனோகரனை முதன் முதலில் மருத்துவமனையில் கொண்டு சேர்த்த கார்த்திகேயனை நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. இறந்துபோன மனோகரின் வீடு சம்பவ இடத்தில் இருந்து தெற்கே 1.5கி.மீ இருக்கும் என்றால் சரிதான்.சம்புலம் என்ற ஏரி சம்பவ இடத்திலிருந்து எந்த திசையில் இருக்கிறது எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பாலகிருஷ்ணன் எங்கள் காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமாக ஒரு புகார் கொடுத்தார் என்றும் அது மறைக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட பாலகிருஷ்ணன் இந்த நீதிமன்றத்தில் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் அந்த வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 பாலகிருஷ்ணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் எதிரிக்களுக்கு பிணை தர கூடாது என்று மறுப்பு தெரிவித்த ஆவணத்தில் சம்பவ இடம் மனோகரன் வீடு என்றும், அங்கு எதிரிகள் மது அருந்திக்கொண்டிருந்ததாகவும், அதை மனோகர் தட்டி கேட்டதாகவும், எதிரிகள் மனோகரன் வீட்டில் இருந்து 1.5கி.மீ தூரம் மாதாகோவில் உண்டியல் வரை இழுத்து வந்தார்கள் என்று சொன்னால் எனது விசாரணையில் அவ்வாறு என்று சொல்லவில்லை மாதாகோவில் அருகில் மழை காரணமாக

ஒதுங்கினார் என்று சொல்லியுள்ளார். இந்த எதிரிகளை தவிர சகாயம் த/பெ செல்வராஜ், நெல்சன் சாமுவேல் த/பெ சகாயம் ஆகியோர் மனோகரனை தாக்கியதாவும் கூறியிருந்ததால் அதுபற்றி என்னிடம் அதுபோல் கூறவில்லை. ஆரம்ப சுகாதார நிலைய செவிலியரை நான் விசாரிக்கவில்லை. நான் சொல்வது போல சம்பவம் இல்லை என்றும் மது அருந்திவிட்டு சைக்கிளில் சென்றவர் எங்கோ விழுந்துவிட்டு அதில் ஏற்பட்ட காயங்களால் பின்னிட்டு பொய்யாக இந்த வழக்கு எதிரிகளின் மீது சாட்சிகளால் ஜோடிக்கப்பட்டு நான் உண்மை எதுவும் தெரியாமல் என் புலன் விசாரணையை அமைத்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன மனோகரனுக்கு காது கேட்காது என்று சாட்சிகள் என்னுடைய புலன் விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். பொய் வழக்கில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.